**வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் பகுதி 01 - 2019**

---

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் பகுதி 01 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் II, பீ.3 ஆம் பிரிவின் 2 ஆம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கை பகுதி – 01 இன் பிரகாரம், முன்னைய ஆரம்பக் கைத்தொழில் அமைச்சாகவிருந்த தற்போதைய பெருந்தோட்ட அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள், குறிப்பாக முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு, உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மூலதன மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதங்கள் எனும் 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,612.27 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.97 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.87 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 6,620.39 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 44.47 மில்லியன் நலன்பெறுனர்களால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக நலன்பெறுனர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு வேறாக இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி வளங்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | இது மூன்றாம் தரப்பினரின் வங்கிக் கொடுக்கல் வாங்கல் என்பதாலும் எமது கணக்கேடுகளில் இரட்டைப் பதிவு மேற்கொள்ளப்பட முடியாமையாலும் நலன்பெறுனர்களின் பங்களிப்பைக் கணக்கிடுவதற்கு தற்போது ஓர் பொறிமுறை இல்லை. திறைசேரி.். நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் இவ் விடயத்தை ஆராய்ந்து கணக்கீட்டுப் பதிவு மற்றும் நிதி வெளிப்படுத்தல் தொடர்பாக அவர்களின் கருத்தையும் அபிப்பிராயத்தையும் அறிந்து நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | நலன்பெறுனர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் செயற்திட்டத்தால் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 முதல் 2019 வரையான ஆண்டின் போது வெட்டுக் கருவிகள், நீர்க் குவளைகள், தேநீர் | ஆதன, இயந்திர உபகரணக் கணக்கு அதே தொகையால் அதிகரித்துக் | சீராக்கப்பட்ட நாட்குறிப்புப் பதிவு மேற்கொள்ளப்பட்டு தவறு நிதிக்கூற்றுக்களில் முறைப்படி சீராக்கப்பட்டுள்ளது. | தவறைச் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகுதி மற்றும் பெயர்ப்பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டமைக்காகச் செலவிடப்பட்ட ரூபா 2.01 மில்லியன் தவறாக தளபாடம் மற்றும் உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் ஆதன, இயந்திர உபகரணக் கணக்கு அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | காட்டப்பட்டிருந்தது | | |
| (இ) | உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு கம்பனிகளுக்கு ரூபா 19.14 மில்லியன் தொகை இணை மானியமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை மீறப்பட்டதன் காரணமாக நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இத் தகவல் நிகழத்தக்கவையாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழத்தக்கவைகுறித்து உண்மை நிலைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எமது அறிவிற்கிணங்க, இரு ஆதரவாளர்கள் மாத்திரமே செயற்திட்டத்தைக் கைவிட்டிருந்தனர். சட்ட ரீதியான ஒப்புதல்கள் பெறப்பட்டதை அடுத்து 2020 கணக்குகளில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்கவையாக இத் தகவல் வெளிப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | --------------------- | -------------------- | ----------------- | ----------------------- | -------------------- |
| (அ) | நிதி அமைச்சின் 2002 நவம்பர் 28 இன் | ரூபா 9.48 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் | செயற்திட்ட அலுவலகத்தில் வழங்கப்பட்ட | பொதுவான நிலையான செத்துப் பதிவேட்டில் ஏனைய | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | மற்றும பொருத்திகள், கணனிகள் மற்றும பொருத்திகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் குறித்து பதிவுகள் இல்லாததன் காரணமாக மடிக் கணனிகளும் ஏனைய கணனி உதிரிப் பாகங்களும் செயற்திட்டத்தின் குறித்த நோக்கத்திற்காகவோ ஏனைய நோக்கங்களுக்காகவோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களுடன் விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. உடனடியாக வேறான ஓர் பதிவேடு கணனி மற்றும் சாதனங்களுக்காகப் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவேடுகள் தற்போது நாளதுவரையாக்கப்பட்டுவருகின்றன. | வேண்டும். |

4. பௌதீக செயலாற்றல்

4.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்தன. அவையாவன:

(அ) முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு
(ஆ) விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கான மூலதன மானியங்களை இணைத்தல்
(இ) பங்கேற்பு நிதி நிறுவனங்களின் நிதி இடரிற்கு உதவுதல்

| கூறுகள் | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ----------- | ---------------------------- | --------------- | --------------------- | --------------- |
| (i) இணை மானியங்கள் | யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை 07 முன்னோடி மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 350 விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கு இணை மானிய நிகழ்ச்சித்திட்டம் ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, | தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் உயர் வறுமைக் குழுக்களாக செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் இனங்காணப்பட்ட குறித்த விவசாயிகளுக்கு செயற்திட்டத்தின் குறித்த நலன்கள் எய்தப்படமாட்டாது. | அடிப்படையில 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளில் 1 ஆம் 2 ஆம் ஈஓஐ கோரல்களுக்கு பதிலளிக்கும் வகையில் 7 முன்னோடி மாவட்டங்களிலும் பாரியளவு முதலீடுள்ள சாத்தியவள செயற்திட்டங்களும் இருக்கவில்லை. தற்போது பீஎம்யூ இவ் 7 முன்னோடி மாவட்டங்களிலும் | செயற்திட்டக் குறிக்கோள்களை எய்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | குருநாகல் உட்பட ஏனைய 15 மாவட்டங்களை இணை மானியங்கள் வழங்குவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளது. மொத்த மானியங்களில் 86.6 சதவீதம் மேற்குறித்த 15 ஏனைய மாவட்டங்களிற்கு ஒதுக்கியிருந்தது. | | குறித்த மாவட்டங்களின் மாகாணச் செயலகங்களிலும் இம் மாவட்டங்களின் வருங்கால முதலீட்டாளர்களை இனங்காண்பதற்காக குறித்த மாவட்டங்களின் சபை அங்கத்தவர்களிற்கு கூடியளவு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திவருகின்றது. | |
| (ii) | 2019 திசெம்பர் 31 வரையில் 37 ஆதரவாளர் கம்பனிகளுக்கு ரூபா 540.32 மில்லியன் தொகை இணை மானியமாக செயற்திட்டம் அங்கீகரித்திருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட திகதியில் இருந்து 6 முதல் 24 மாத காலதாமதத்தை அடுத்தும் இணை மானியங்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை . | செயற்திட்டத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை குறித்த செயற்திட்டக் காலத்திற்குள் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட முடியாது போகும். இதன் விளைவாக பயன்படுத்தப்படாத நிதிக்காக திறைசேரியால் ஐடீஏ இற்கு உறுதிப்பாட்டுக் கட்டணம் செலுத்த நேரிடும். | இது முக்கியமாக தனது சொந்தப் பங்களிப்பையும் வங்கிக் கடன்களினூடாக வர்த்தகக் கடன்களையும் ஆதரவாளர் காண்பிக்கத் தவறியமையாலாகும். சகல சட்ட ரீதியான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டால் அன்றி மானிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முடியாது. இது பீஎம்யூ வின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | செயற்திட்டக் குறிக்கோள்களை எய்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, செயற்திட்டம் 2019 மார்ச் 31 வரையில் 3 ஆதரவாளர் கம்பனிகளுக்கு முதற் கட்டமாக ரூபா 14.63 மில்லியன் பெறுமதியான மானியத்தை இணை மானியமாக வழங்கியிருந்தது. எவ்வாறெனினும், குறித்த ஆதரவாளர் கம்பனிகளுக்கு இரண்டாம் கட்டம் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை குறித்த செயற்திட்டக் காலத்திற்குள் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட முடியாது போகும். இதன் விளைவாக பயன்படுத்தப்படாத நிதிக்காக திறைசேரியால் ஐடீஏ இற்கு உறுதிப்பாட்டுக் கட்டணம் செலுத்த | இது குறிப்பாக செயற்திட்டத்தின் பாங்கைச் சார்ந்ததாகும். செயற்திட்டத்தின் வேறான காலப்பகுதியின் அடிப்படையில் 1 ஆம் கட்டத்தின் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் அடிப்படையில் 2 ஆம் கட்ட விடுவிப்பு சார்ந்திருக்கும். இணை சதவீதம் | செயற்திட்டக் குறிக்கோள்களை எய்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நேரிடும். | எய்தப்படும் வரையில் நிதி விடுவிக்கப்படமாட்டாது . செயற்திட்டத்தின் ஆரம்ப அமுலாக்கல் திட்ட நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டதைப் பார்க்கிலும் காலதாமதமாகின்றன. | |
| (iv) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் இணைப்பு 2 இன் 8 (ஆ) vi ஆம் பந்தியின் படி, அம் முதலீட்டுத் திட்டமும் இணை மானியமும் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு மேலான காலமாக அமுலாக்கப்பட உள்ளவையாகும். எவ்வாறெனினும், 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்ட இணை மானியத்தொகையான ரூபா 1500.25 மில்லியன் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலும் முதலீட்டு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. | செயற்திட்டத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை குறித்த செயற்திட்டக் காலத்திற்குள் ஆதரவாளர்களுக் கு வழங்கப்பட முடியாது போகும். இதன் விளைவாக பயன்படுத்தப்படாத நிதிக்காக திறைசேரியால் ஐடீஏ இற்கு உறுதிப்பாட்டுக் கட்டணம் செலுத்த நேரிடும். | முதலீட்டின் அளவைப் பொறுத்து இது மாறுபடும். குறிப்பிடப்பட்ட செயற்திட்டம், சொந்த நிதியீடு, வங்கிக் கடன் மற்றும் ஈபீஎல்/ அரசாங்க நியதிச்சட்ட அங்கீகாரங்கள் போன்ற உரிய சட்ட ஆவணங்கள், காணி அனுமதிகள் முதலியவை இன்மையால் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் மட்டத்தை எய்தியிருக்கவில்லை. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் படி, செயற்திட்டம் 2 முதல் 3 ஆண்டுகளில் பூர்த்தியடைய வேண்டும். எவ்வாறெனினும், இவ் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் குறிப்பாக மேற்குறித்த காரணங்களால் செயற்படுத்தப்பட முடியாதிருந்தன. | செயற்திட்டக் குறிக்கோள்களை எய்துவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | இணை மானியத் திட்டத்தின் செயற்பாட்டுக் கையேட்டின் 8.5 ஆம் பந்தியின் படி, பீஎம்யூ வினால் ‘‘சிக்கல் செயற்திட்டங்கள்’’ இன் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு அவ்வப்போது | கடன் நிதியங்கள் விரையமாக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்பட முடியாதுள்ளது. | செயற்திட்ட அமுலாக்கல் முதல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் பட்டியலைப் பராமரித்துள்ளார். | நிலைமையைச் சீராக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இணை மானிய உடன்படிக்கையின் படி, விரைவான நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், இத்தகைய சிக்கல் செயற்திட்டங்களின் பட்டியல் ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது 2017 ஆம் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 19.14 மில்லியன் தொகையான இணை மானியங்கள் 04 கம்பனிகளுக்கு விடுவிக்கப்பட்டு அவை செயற்பாடுகளைக் கைவிடப்பட்ட நிலையில் ரூபா 1.35 மில்லியன் தொகையை மாத்திரம் மீளளித்திருந்தன. செயற்திட்டத்தால் இது தொடர்பான மிகுதித் தொகையான ரூபா 17.79 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பகுதிக் கடன் உத்தரவாதம் | செயற்திட்டத்தின் பகுதிக் கடன் உத்தரவாதக் கூறின் கீழ் உள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யூஎஸ் டொலர் 7.12 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகளுடன் பல்வேறு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் நிர்வாக ஒழுங்குகளில் பல்வேறு சிக்கல்கள் எதிர்நோக்கப்படுவதனால் | ஆதரவாளரின் கடன் திட்டச் செயற்பாடு பாதிப்படைகின்றது. | பகுதிக் கடன் உத்தரவாதம் குறித்த கணக்காய்வாளரின் பார்வை உண்மையானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமாகும். | தனியார் வங்கிக் கடன் திட்டத்தின் மூலம் இக் கடன் திட்டத்தை அமுலாக்குவதற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

குறித்த வங்கிகளால் எவ்வித நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதே செயற்திட்டத்தின் விளக்கமாகக் காணப்பட்டது.

## 4.3 கள ஆய்வின் போதான அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளில் 13 ஆதரவாளர் கம்பனிகளின சகல நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இராமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 134.73 மில்லியன் இணை மானியமாக இக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. | செயற்திட்டக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் எய்தப்பட முடியாது. | திட்ட அமுலாக்கல் அட்டவணையில் இருந்து சில நடவடிக்கைகள் தாமதமாவது எம்மால் கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக நிர்மாணிப்பு, இயந்திர ஸ்தாபிப்பு, தொழிநுட்ப மாற்றம். கள அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பு மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் மேலதிக விளக்கத்திற்காக இப் 13 ஆதரவாளர்களிடம் இருந்தும் தற்போதைய நிலை குறித்து நாளதுவரையான விபரங்கள் கோரப்பட்டுள்ளன. | இணை மானிய உடன்படிக்கையின் படி, விரைவாக நிலைமையைச் சீராக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதியீட்டல் முகவர்களால் ஒதுக்கப்பட்ட ரூபா 8,869.38 மில்லியன் தொகைக்குச் சமனான ஐ.அ. டொலர் 60.77 மில்லியன் தொகையில் 21.54 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 2,135.42 மில்லியனிற்குச் சமனான ஐ.அ. டொலர் 13.09 மில்லியன் மாத்திரமே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளின் பின்னரும் 2019 | எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,135.42 மில்லியன் தொகையே மீளப் பெறப்பட்டதாக நாம் உடன்படுகின்றோம். எவ்வாறெனினும், கூறு 1 இற்கான மொத்த ஒதுக்கீடு ஐ.அ. டொலர் 58.63 | செயற்திட்ட நோக்கை எய்துவதற்கு செயற்திட்ட நோக்கங்களைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | மில்லியனானதுடன் ஐ.அ. டொலர் 60.77 மில்லியனன்று. எம் மற்றும் ஈ இற்கான ஒதுக்கீடு கூறு 2 உடன் பகிரப்பட வேண்டும். செயற்பாட்டு அட்டவணையின் படி குறித்த காலத்தில் செயற்திட்டங்களை ஆதரவாளர்களால் செயற்படுத்த முடியாது போனமையாலும் அதனால் மானிய வழங்கல் நீடிக்கப்பட்டமையாலும் ஒதுக்கிடப்பட்ட நிதியத்தில் குறைவான சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2017 இன் போது ரூபா 4.25 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஓர் இணைய – தள ஜீஐஎஸ் மென்பொருள் கடந்த 3 ஆண்டு காலமாக குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை. | ஜீஐஎஸ் இற்காக சரியான ஓர் உசாவுனர் ஆட்சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. தேவையான வேலையைச் செயற்படுத்துவதற்கு தேவையான அனுபவத்துடனான விரும்பத்தக்க நபர் தெரிவு செய்வது சிக்கலாகக் காணப்பட்டது. தற்போது 2019 ஆகஸ்ட் 28 ஆம் திகதி புதிய உசாவுனர் ஒருவர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மென்பொருள் உச்ச அளவில் பயன்படுத்தப்படுகின்றது. | நிலைமையைச் சீராக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.5 சர்ச்சைக்குரிய நடவடிக்கைகள்**

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | -------------------- | ------------- | -------------------------- | --------------------- |
| (அ) | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக 5000 ஏற்றுமதிக் கிராமங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்ப கட்ட நடவடிக்கையாக, ஆரம்ப நிகழ்ச்சி நடவடிக்கைகளிற்கு ரூபா 4.24 மில்லியன் கிரயத்தில் தெஹியத்த கண்டியவில் 2019 யூன் 17 ஆம் திகதி நாடளாவிய ரீதியாக 1000 கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. | பொது நிதியத்தின் விரயமும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கு எய்தப்பட முடியாமை. | ஏற்றுமதிக் கிராமங்களை ஸ்தாபிப்பு அப்போதைய சமூக மேம்பாடு மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சினால் நடாத்தப்பட்ட ஓர் நிகழ்ச்சித்திட்டமாகும். இதே நேரம், நலன்பெறுனர்களின் பங்காளித்துவத்தைக் கட்டியெழுப்புவதற்காக பெரும்பாலான தொழில்முயற்சியாளர்கள் அந் நிகழ்வில் பங்கேற்றிருந்தமையால் ஏஎஸ்எம்பீ பொருத்தமான ஆதரவாளர்களை இனங்காண்பதற்கான விழிப்புணர்ச்சியை மேற்கொள்வதற்கு இதனைச் சந்தர்ப்பவசமாக்கிக்கொண்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்ட செயற்பாட்டுக் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இணை மானிய நலனாளிகளின் வளாகத்தில் பெயர்ப்பலகையை ஸ்தாபிப்பதற்கான ஓர் நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்காக 2019 திசெம்பர் 31 இன் இறுதியில் செயற்திட்ட நோக்கங்களுக்கு முரணாக ரூபா 2.16 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | பொது நிதியத்தின் விரயமும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கு செயற்திட்டக் காலப்பகுதியின் போது எய்தப்பட முடியாமையும் | ஊலக வங்கியின் பீஏடீ இன் படி, குறைகளை நிவர்த்திசெய்யும் பொறிமுறைக்கமைவாகவே இது மேற்கொள்ளப்பட்டது. அனைத்துத் தரங்களும் பூர்த்திசெய்யப்பட்டு, சட்டபூர்வமாக தொடர்புபட்ட செயற்திட்டம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை மக்களுக்குத் தெரிவிக்கும் ஓர் முறையே இவ் அடையாளப் பலகையாகும். இதன் விளைவாக, சுற்றியுள்ள பகுதி மக்கள் ஏதேனும் குறைகள் இருப்பின் நேரடியாகவே அமைச்சிற்கு அறிவிக்கும் நிலை உள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்ட செயற்பாட்டுக் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் நோக்கம் விவசாயப் பொருட்களுக்கு பெறுமதி சேர்ப்பனவை வழங்குவதான போதிலும் ரூபா 3.4 மில்லியனிற்கு சிக்கனமற்ற செலவினத்தை மேற்கொண்டு ஆடுகளைக் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கு செயற்திட்டக் காலப்பகுதியின் போது எய்தப்பட முடியாமையும் | கால்நடைத்துறையில் மதிப்புச் சங்கிலி வளர்ச்சியில் காணப்பட்ட இடைவெளியை இனங்காண்கையில் கால்நடைகள் மற்றும் கால்நடை வளர்ப்பிலேயே மிகப்பெரிய இடைவெளி உள்ளமை தெரிய வந்தது. விவசாய முனை என்பது மதிப்புச் சங்கிலியின் மேல்நிலையானதுடன் இவ் இடைவெளியை நிரப்புவதற்காக குறித்த செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன் இது ஒரு முறை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். இம் முன்னோடிச் செயற்திட்டத்தின் விளைவு இது போன்ற முன்னோடிச் செயற்திட்டங்களின் தொடர்ச்சித் தன்மையைத் தீர்மானிப்பதற்கு அதிகாரிகளுக்கு உதவக்கூடியதாகும். | செயற்திட்டத்தின் நோக்கங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்ட செயற்பாட்டுக் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |